
# ஜே. ஆரின் பேச்சுக்கு 'இந்தியா கண்டனம்

விலை ரூபா 1-25
REGISTERED AS A NEWSPAPER

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

முரசு 1 ஒலி 154 சனி 02 - 05 - 1987 (சித்திரை 19) றம்ழான் 03

இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா கடைப் பிடித்துவரும் கொள்கை சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய வெளி யுறவுச் செயலர் திரு. மேனன் இந்தக் கருத்துக் களை ஏற்க முடியாதென்றும் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு சக்திகள், முக்கியமாக மொஸாட் இலங்கைப் பிரச்சினையை வளர்ப்பதில் அக்கறை காட்டிவருகின்றது என்று இலங்கையின் டில்லித் தூதுவர் பெர்னட் திலகரட்னாவிடம் தெரிவித்த மேனன், மொஸாட்டின் நடவடிக்கைகளைக் கட் டுப்படுத்துமாறும் எச்சரித்தார். யாழ்ப்பாணத் தில் வாழும் பெருந்தொகையான தமிழர் அப்பா விகள் என்றும் குறிப்பிட்ட மேனன், இவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லையென்றும், இலங்கை அரசின் நடவடிக்கைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கே தமிழ் நாடு அரசு மனிதாபி —6ஆம் பக்கம் பார்க்க



சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் நேற்று இடம்பெற்ற வரலாறுபடைத்த பெருமைபெற்ற விடுதலைப் புலிகளின் மேதின விழாவில் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது திரண்டிருந்த ஜனசமுத்திரத்தின் மத்தியில் புலிகளின் தலைவர்கள் உரையாற்றுகின்றனர். தளபதி கிட்டு வானில் அமர்ந்திருந்தவாறு உரையாற்றுவதை முதற் படத்திலும், அரசியல் பிரிவுத் தலைவர் திலீபன், மாணவர் அமைப்பு (செஸோ) தலைவர் முரளி ஆகியோர் உரைநிகழ்த்துவதை மற்றைய படங்களிலும் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர் வி. ஆனந்த்)

# ஜனசமுத்திரத்தின் மத்தியில்

# புலிகளின் மேதினக் கூட்டம்

## தளபதி கிட்டுவுக்கு உணர்ச்சி வரவேற்பு

(அலுவலக நிருபர் இ. பாரதி)

''இன்று அரச படைகளின் வானத்தாக்குதல்கள் எமது மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும்கூட இவ்வளவு பெருந்தொகையான மக்கள் எமது அழைப்பை ஏற்று இம் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பது விடுதலை இலட்சியத்தில் எமது மக்கள் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையே எடுத்துக் காட்டுகிறது'' என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. ச. கிருஷ்ணகுமார் (கிட்டு) நல்லூரில் நேற்றுக் கூடியிருந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப் ... 6 ஆம் பக்கம் பார்க்க



ஈழவர் முன்னணியின் மேதின ஊர்வலம் சுன்னாகத்தைச் சென்றடைவதையும், முன்னணியின் பிரமுகர் திரு. பரராஜசிங்கம் இங்கு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்: சி. சந்தானகுமரன்)

## இலங்கைப் பிரச்சினையை சாதகமாக்கும் அமெரிக்காவின்மீது சோவியத் கண்டனம்

இலங்கை இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இராணுவமயமாக ஆக்கிரமிக்க அமெரிக்கா முழுமுயற்சிஎடுத்துவருவதாக கொழும்பிலுள்ள சோவியத்தூதுவராலயம் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்ப் போராளிகளுக்கு சோவியத் அரசாங்கம் ஆயுதங்கள் வழங்கி வருவதாக வெளியான செய்திக்கு பதிலளிக்குமுகமாக கொழும்பில் உள்ள சோவியத்தூதுவராலயம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அமெரிக்கா மீதான இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அமெரிக்கா திருகோணமலை துறைமுகத்தில் தளம் அமைக்க நீண்ட நாட்களாக முய ... 6 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு மேதின மோதல் ஒருவர் பலி; பொலிஸ் காயம்

மேதினத்தடையையும் மீறி கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் ஊர்வலத்தைத் தடுக்க பொலிஸார் முனைந்தபோது பொது மக்களில் ஒருவர் பலியானார். பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ... 6 ஆம் பக்கம் பார்க்க

★ ஈழவர் முன்னணி மேதின விழாவில் 'பரா' பேச்சு

## மலையகம் அணி திரளுமானால் அரசாங்கம் ஆட்டம் காணும்!

(அலுவலக நிருபர் எட்வர்ட் லியோன்)

''எமது ஈழப்போராட்டத்தில் தொழிலாளர்களின் பங்கு பற்றி இன்று நாம் முக்கியமாக சிந்திக்க வேண்டியவர்களாய் உள்ளோம். எந்த ஒரு நாட்டிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை அடைய வேண்டுமானால் தொழிலாளவர்க்கம் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும். ஆளும் வர்க்கத்திற்கு எதிராக தொழிலாளர் ஒன்று சேர்ந்து போராடும்போது தான் போராட்டம் வெற்றி பெறும். ஈழத்தின் உண்மையான தொழிலாளர்களும், உழைப்புத் திறன் உள்ள மக்களும் மலையகத்து மக்கள்தான் என்பதை மறுக்க முடியாது. ... 6 ஆம் பக்கம் பார்க்க

நிதி அமைச்சர் றெனி சொல்கிறார்:

# இலங்கையின் பொருளாதாரம்

## பத்தாண்டு பின்நோக்கிப் போகின்றது!

(ஒஸ்லோ)

நாட்டின் தீவிரவாத நடவடிக்கை, உல்லாசபயணத்துறையின்மூலம்கிடைக்கும் வருமான வீழ்ச்சி, பொருட்களின் விலை வீழ்ச்சி, வரட்சி என்பவற்றால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் கடந்த பத்து வருடங்களுக்குப்பின் நோக்கி வீழ்ச்சியடையும் நிலையை அடைந்துள்ளது என நிதியமைச்சர் றெனிடி மெல் ராய்ட்டர் நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மொத்த தேசிய அதிகரிப்பு நான்கு சதவீதமாகவே இந்தவருடம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சொன்னார் ஆசிய அபிவிருத்தி வங்கி வருடாந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அமைச்சர் ஜப்பான் சென்றுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் சராசரி ஐந்து சதவீதமாகவே இருந்து வந்துள்ளது எனக்குறிப்பிட்ட அமைச்சர் 1983 ஜூலை கலவரங்களையடுத்து முதல் இரண்டு வருடங்களுக்கு முக்கிய ஏற்றுமதிப் பொருள்களானதேயிலை, றபர், தெங்கு ஆகியவற்றின் உற்பத்தியும், நெல் உற்பத்தியும் ஸ்திரமாக இருந்தன என்றார்.

1984இல் தனியார்துறைஉற்பத்தி இருபத்தைந்து சதவீதம் வளர்ச்சியடைந்தது ஆனால் 1986 ஆல்இதுமிக மோசமான நிலையை அடைந்தது.

தேயிலையின் விலை 1984இல் இருந்ததைவிட தற்போது அரைவாசியாககுறைந்துள்ளது றபர், கொப்பரா என்பனவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளன.

உல்லாசப் பயணத்துறையால் வரும் வருமானமும் குறைந்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கையர்கள் அனுப்பி வைக்கும் பணத்திலும் வீழ்ச்சி காணப்பட்டது.

உலகில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியால் பணத்தை மீதப்படுத்தக் கூடியதாக நாம் இருந்த போதிலும் ஏற்றுமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சி அதனை அர்த்தமற்றதாக்கியுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளினால் பாதுகாப்பு செலவினங்களும் அதிகரித்துள்ளது. 1987 இல் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினம் சுமார் இருபது சதவீதமாக இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது இந்நிலையிலும் இலங்கை மொத்த வெளிநாட்டு கடனை முந்நூறு கோடி டாலராக மட்டுப்படுத்தி வைத்துள்ளது. இவ்வாறு அவர் சொன்னார்.

## பஸ்ஸில் வந்த இருஇளைஞர் இராணுவம் சுட்டு மரணம்

மன்னாரிலிருந்து நேற்றுமுன்தினம்சங்குப்பிட்டித்துறையை நோக்கி வந்துகொண்டிருந்த இ. போ. சபை பஸ்ஸை மறித்து ஏறிய இராணுவ சிப்பாய்கள் அந்தபஸ்சினுள் குறைந்த வயதினராக இருந்த இரு இளைஞர்களை இறக்கி பிரயாணிகள் முன்னிலையிலேயே சுட்டுக்கொலை செய்தனர்.

இலுப்பைக்கடவைக்கும், பள்ளமடுவுககுமிடையே இச்சம்பவம் நடைபெற்றது.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞராவார். மற்றவர் மன்னார் கச்சேரியில் வேலை செய்யும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராவார்.

## ஆனந்தவிகடன் ஆசிரியர் வழக்கு

அண்மையில் தமிழக சட்டசபை வழங்கிய தண்டனையை ரத்துச் செய்யக்கோரி 'ஆனந்த விகடன்' ஆசிரியர் பாலசுப்பிரமணியம் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழக சட்டசபை விதித்த தண்டனையால் தனது குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டு தனக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளமையால் தகுந்த நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தரும்படியும்அவர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

## மகோற்சவம் ஆரம்பம்

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

## தென்னையில் ஏறிய ஷெல்

கொட்டடி சிவன் பண்ணை வீதியிலுள்ள வீடொன்றின் தென்னை மரமொன்றில் முனை ஏறிய நிலையில் ஆர். பி. ஜி. ஷெல் ஒன்று வெடிக்காமல் இருக்கக் காணப்பட்டது.

வாழைப் பொத்தி வடிவிலுள்ள இந்த வெடிக்காத ஷெல்லை பலரும் சென்று பார்வையிட்டனர்.

## இளைஞர் கைது

(சாவகச்சேரி)

முறிகண்டியில் இறைச்சி வியாபாரம் செய்து வந்த இளைஞர் ஒருவர் ராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கிளிநொச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிங்களம் தெரியுமா என ராணுவம் கேட்டபோதுஇவர் தெரியாது என சிங்களத்தில் பதில் கூறியதாலேயே இவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் இவரது காலில்இருந்த காயம் பற்றிக்கேட்ட போதும் சரியானபதில்கூறவில்லையாம். இதனால் இவர் மீது சந்தேகம் ஏற்பட்டதால் கைதானார்.

## ஷெல் அடிகள் குறையவில்லை

(வல்வெட்டித்துறை)

நேற்று முன்தினம் இரவு 11 மணிக்குமேல் திடீரென வல்வை இராணுவ முகாமிலிருந்து பத்துக்குமதிகமான ஷெல்கள் அடிக்கப்பட்டன. நேற்றுக் காலையிலும் ஷெல்கள் அடிக்கப்பட்டன

இதனால் பல வீடுகள் சேதத்துக்குள்ளாயின. கம்பர்மலை, கொம்மந்தறை, வல்வை அம்மன்கோவிலடி ஆகிய மக்கள் வாழும் பகுதிகளில் விழுந்து வெடித்தவையாயினும், மக்கள் பதுங்குகுழிகளிலும், பாதுகாப்பான இடங்களிலும் தஞ்சம் புகுந்ததால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

அம்மன் கோவில் கூரைகள் ஷெல் துண்டங்கள் சிதறியதால் சேதமுற்றன.

## இளைஞர்கள் சிரமதானம்

(வல்வெட்டித்துறை)

கடந்த வியாழகிழமை வல்வை ஊறணிப் பகுதியில் பொம்பர் விமானங்கள் குண்டு வீசித் தகர்க்கப்பட்ட வீடுகளின் சுற்றுடல்களை வல்வை நெடியகாடு இளைஞர் கழகம், ஊறணி இளைஞர்கள் சிரமதானமாக துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வல்வை அகதிகள் புனர்வாழ்வு சபையினர் உடனடியாக வழங்கக்கூடிய சிறு உதவிகளை வழங்கினர். வல்வை பிரஜைகள் குழுவினர் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டியுள்ளனர், பருத்தித்துறை வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஊடாக இவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கோரியுள்ளனர்.


சித்திரச் சிறுவிளம்பரம்

கல்வி

புதிய வகுப்புகள் க. பொ. த. (உயர்) 89 கலை/வர்த்தகம், விஞ்ஞானம். ஆண்டு 4 5 6, 7 8, 9. 11 ஆரம்பம்: 9-5-87 பி. ப 3மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.

04122

பிரயாண ஒழுங்கு

★ நோர்வே ★ கனடா ★ லண்டன்

● சவுதி அரேபியா

கிளினேஸ்,
மேசன்,
காப்பென்ரர்,
HV. சாரதிகள்,
பணிப் பெண்கள்.
A.C. மெக்கானிக்.
A.C. ஒப்பிறேற்றர்,
டீசல் மெக்கானிக்,
பிளம்பர்,
வெல்டர்,
லேபரர்.

● குவைத்:-

கிளினேஸ்,
பணிப் பெண்கள்,
HV. சாரதிகள்,
HQ. சாரதிகள்
பிளம்பர்,
காப்பென்ரேஸ்.

● சிங்கப்பூர்

லேபரர்,
பணிப் பெண்கள்.

இப்பிரயாணத்தை மேற்கொள்ள விரும்புவோர் உடன் வந்து எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்:- மிகக்குறைந்த கட்டணத்தில் பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற் என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:-

ROSAAN
Kopay Junction
Kopay

05010

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ நோர்வே
★ ஜேர்மனி ★ லண்டன்

● ஜேர்மனி ● நோர்வே ● U. K.

செல்ல விரும்புவோருக்கு கொழும்பில் இருந்து நேரடி ஒழுங்குகள் செய்துதரப்படும். எமது குழு 10-15 திகதி செல்ல இருப்பதால் உங்கள் பிரயாணத்திற்கு எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். கடந்த 16-04-87 இல் நோர்வே பிரயாணம் செய்தவர்கள் வெற்றிகரமாக முடித்து உள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

● சவூதி அரேபியாவுக்கு

கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன. உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

| | S. R. | | S. R. |
|---|---|---|---|
| Stevedoring Labrs | 350 | Winchman | 650 |
| Whare House Labrs | 350 | Forklift Operater | 850 |
| Cleaning Labours | 325 | Trailer Driver | 850 |
| Kitchen Helper | 325 | Cars Driver | 650 |
| Gang Foreman | 550 | Crane Operater | 700 |
| Ship Foreman | 650 | Camp Boss | 800 |
| Tally Clerk | 650 | Male Nurse | 800 |
| Document Clerk | 600 | Technical Manager | 1700 |
| Office Staff | 600 | Oprtonal Manager | 1700 |
| Pay Roll Clerk | 650 | Administrative Manager | 1700 |
| Cargo Supervisor | 750 | | |
| Tally Checkers | 700 | Doctor | 2000 |

சவூதிஅரேபியாவுக்கு
பணிப்பெண்கள் தேவை
சம்பளம் 400 S. R

இரண்டு கிழமைக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.

● சவூதிஅரேபியாவுக்கு

பிரயாணம் செய்வதற்குப் பாஸ்போட் கொடுத்தவர்களுக்குச் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு விட்டன. அவர்கள் உடன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
N. பாலா
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

05011

கிளைகள்:

● ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
குப்பிளான் சந்திக்கு அருகாமையில் குப்பிளான்.

● ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
வங்களாவடிச் சந்தி
வேலணை.


## அந்தியேட்டிசபிண்டிகரண அழைப்பு

### முத்துசாமி - திருநாவுக்கரசு

மலர்வு:- 23.06.1932 உதிர்வு:- 01.04 1987

முன்னாள் புத்தூர் கிராமசபைத் தலைவர் அமரர் முத்துசாமி - திருநாவுக்கரசின் 31 ஆம் நாள் சமயகிரியைகள் இன்று சனிக்கிழமை (02.05.1987) நடைபெறும். இச் சமயச் சடங்குகளில் கலந்து கொள்ளுமாறு உறவினரையும், நண்பர்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்
அன்னாரின் பிரிவால் துயருறும்
தாய், மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

05009

### நல்வாக்கு

குடிமக்களின் சம்மதத்தைப் பெற்றிருக்கும்வரைதான் ஓர் அரசாங்கம் சேவை செய்யும் கருவியாக இருக்க முடியும்; கத்திமுனையில் அடக்கி ஆளும்போது அது நசுக்கும் கருவியாகி விடுகிறது.

— மகாத்மா காந்தி

ஆர். ஜீ. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## சர்வாதிகார அரசுக்கு கஷ்ட காலம் ஆரம்பம்

கொழும்பில் மேதின விழாவுக்குத் தடை;

கண்டி தலதா மாளிகை பொதுமக்கள் செல்ல முடியாது மூடப்பட்டுள்ளது;

வெசாக் தினத்தை மிக அமைதியாகக் கொண்டாடுமாறும், கேளிக்கைகளை நிறுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகளை ஆரம்பிப்பதும் ஒரு நாளினால் தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பஸ்நிலையக் குண்டு வெடிப்பையடுத்து ஜெயவர்த்தன அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகள் இவை.

ஆட்சி நடத்தப் பாதுகாப்பில்லாத ஒரு அரசாங்கம், அதனை வெளியில் சொல்ல முடியாத நிலையில் தொழிலாளர் உரிமை, வழிபாட்டுச் சுதந்திரம், சமகல்வி வசதி என்ற மனித அடிப்படை உரிமைகளில் கை வைக்க ஆரம்பித்துள்ளதை இவ்வாறான எதேச்சாதிகார நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழீழப் பகுதிகளில் இவ்வாறான பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டு, தமிழ் மக்கள் நசுக்கப்பட்டதையடுத்தே இங்கு விடுதலை வேட்கை வீறு கொண்டெழுந்தது.

சிவில் நிர்வாகம் முற்றாகச் சீர் குலைந்து கோடு, கச்சேரி, பொலிஸ் என்பதெல்லாம் வெறும் காட்சிப் பொருட்களாக தமிழ்ப்பகுதிகளில் மாற்றம் கண்டமைக்கு இன்றைய அரசாங்கமே முழுக்காரணமாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திலிருந்து தமிழீழம் தனியான ஒரு நாடாக பிளவுபட்டு விட்டதென்பதற்கு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மே தின வைபவங்களைவிட வேறென்ன சாட்சி வேண்டும்.

நாடு முழுவதும் மே தினக் கொண்டாட்டத்துக்குத் தடையென்று அரசாங்கம் அறிவித்துள்ளதாயினும், யாழ்ப்பாணத்து மே தின வைபவங்களை அதனால் தடை செய்ய முடியாது போனதற்குக் காரணம் இங்கு சிவில் நிர்வாகம் இல்லாமையேதான் என்பதை இப்போதாவது அதிஉத்தம ஜனாதிபதி அவர்கள் உணர்ந்திருப்பார்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர் வடபகுதித் தமிழ் மக்களுக்கு நான்கு கோடி ரூபா நிதியுதவி வழங்க முன்வந்ததையடுத்து 'ஏக்கத்தில்' சிக்கியிருக்கும் ஜெயவர்த்தன, செய்வதென்ன, பேசுவதென்ன என்று தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றார்.

இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்கிறார்.

உள்நாட்டு விவகாரத்தில் எம். ஜி. ஆர் தலையிட அனுமதிக்க மாட்டோம் என்கிறார்.

எமது அனுமதியின்றி வழங்கப்படும் பொருட்களைக் கள்ளக் கடத்தல்கள் என்று அபகரிப்போம் என்கிறார்.

எம். ஜி. ஆரின் தனிப்பட்ட ராணுவமே விடுதலைப் புலிகள் என்கிறார்.

மனநோயாளர் ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள் போல அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேசி வரும் ஜனாதிபதியும் அவரது குழுவினரும், தங்கள் சொந்த நாட்டில், தங்கள் சொந்த மக்கள் மத்தியில் மே தினத்தையும், வெசாக் திருநாளையும் கொண்டாட முடியாதிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்பேசும் மக்களுக்கு எந்தெந்த உரிமைகள் மறுக்கப்பட்டதோ, அதே உரிமைகள் இப்போது சிங்கள, பௌத்த மக்களுக்கும் மறுக்கப்படுகின்றன.

மே தினக் கூட்டங்களுக்கான தடை, வெசாக் கொண்டாட்டத்தடை ஆகியன இதற்கான ஆரம்பப்படிகள் எனலாம்.

இலங்கை, "ஜனநாயக சோஷலிஸ சர்வாதிகாரக் குடியரசாக" மாற்றமடைந்துவருவதை இப்போதாவது சிங்கள பௌத்த மக்கள் உணர்ந்திருப்பார்கள் என நினைக்கின்றோம்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் அமைதியின்மையும், சிங்களத் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்குரலும் இன்றைய ஆட்சியினருக்குத் தலைவலியுடன், திருகுவலியையும் ஏற்படுத்தப்போகின்றது.

ஆட்சி நடத்த முடியாவிட்டால், அரசைக் கலைப்பதை விடுத்து, எதற்காக கதிரையைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்?

---

**பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் வெடிங்டனுக்கு வவுனியாவில் விளக்கம் அளிக்கப்பட்டது**

# தமிழ் இளைஞர் அகதிகளாக வெளிநாடு செல்வது ஏன்?

பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் திரு. வெடிங்டன் வவுனியாவுக்கு விஜயம் செய்த சமயம் வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர் சொர்ணபாலா, திரு. பரராஜசிங்கம் ஆகியோரையும் என்னையும் பிரத்தியேகமாக அரை மணி நேரம்சந்திக்க, வவுனியா கச்சேரியில் அரசாங்க அதிபரால் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. இச்சந்திப்பின் போது அமைச்சரின் குழுவும் பிரித்தானிய தூதுவரும் அவரின் குழுவும் மட்டுமே பிரசன்னமாயிருந்தனர்.

இச்சந்திப்பின் போது திரு வெடிங்டன் இலங்கைஅரசுக்கு சார்பான முறையிலேயே உரையாடல் முழுவதையும் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உரையாடலை ஆரம்பித்து வைத்த திரு. வெடிங்டன் வவுனியாவின் தற்போதைய நிலைமை பற்றி வினவினார் அதற்கு நாம் மூவரும் ஏகமனதாக வவுனியா தற்பொழுது மற்ற தமிழ்ப்பிரதேசங்களைவிட அமைதி நிலவும் பிரதேசமாயுள்ளது என்றும், முன்புபோல ஆயுதப்படையினரால் தொல்லைகள், அழிவுகள், கொலைகள் இல்லை என்றும், வவுனியாவில் தற்போது கடமையாற்றும் இணைப்பதிகாரியினதும் பொலிஸ் அத்தியட்சகரினதும் மனிதாபிமான நடைமுறை செயற்பாடுகளினால் தான் இவ்வமைதி நிலவுகின்றது என்றும் இவர்களுக்குப்பின் கடமையாற்ற வருபவர்கள் எவ்வாறு இருப்பார்களோ தெரியாது என்றும் விபரித்து கூறினோம்.

இவர்களுக்கு முன் பணியாற்றியவர்களின்காலத்தில், நடைபெற்ற அட்டூழியங்கள் யாவற்றையும் பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி சொர்ணபாலா விபரமாக எடுத்துக் கூறினார். இவர் எடுத்துக்கூறிய சம்பவங்களாவன:

- ★ 1983ஆம் ஆண்டு வவுனியா நகரின் கடைகள் பொலிசாரால் எரிக்கப்பட்டது.
- ★ இரு வர்த்தகர்கள் அவர்களது வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா குளத்தருகே சுடப்பட்டது.
- ★ ஒரு சட்டத்தரணியின் வீடு குண்டு வீசி தகர்க்கப்பட்டது.
- ★ பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கணக்கற்ற இளைஞர்கள் மன்னார் வீதியில் வைத்து சுடப்பட்டது.
- ★ தனியார் பஸ்சில் வந்த பயணிகளை பம்பைமடு காட்டிற்குள் அழைத்துச் சென்று சுட்டதில் 14 பயணிகள் இறந்தது.
- ★ மன்னார் வீதியில் கண்ணி வெடியினால்ஒருஇராணுவ வீரர் இறந்ததைத் தொடர்ந்து, இரு இ. போ. ச. பஸ் பயணிகள் இறக்கப்பட்டு சுடப்பட்டது.
- ★ கொக்கிளாய், நாயாறு சம்பவங்களிற்கு பதிலடியாக செட்டிகுளத்திலிருந்தும்,சேமமடுவிலிருந்தும் 100 ஆண்கள் கைது செய்யப்பட்டு ஈரப்பெரிய குள இராணுவ முகாமில் வைத்து சுடப்பட்டது.
- ★ 1985ஆம் ஆண்டு ஆவணி மாதம் இடம் பெற்ற உயிர்உடைமை சேதங்கள் ஆகியனவாகும்.

சர்வதேச மன்னிப்பு சங்கம் (Amnesty International) விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டபடி வவுனியாவிலிருந்து பலர் காணாமல் போனது உண்மையா? அல்லது அவர்கள் தலைமறைவாக வெளிநாடுகளில் அகதிகளாக போலி வேடம்பூண்டு இருக்கின்றார்களா? என திரு. வெடிங்டன் வினவியபோது பதிலளித்த திரு சொர்ணபாலா மறைந்தவர்களின் நெருங்கிய உறவினர் சம்பவம் நடந்ததினம் முதல் (02-12-84) இன்றுவரை தன்னை அடிக்கடி துயரத்துடன் தொடர்பு கொண்டு வருகின்றார்கள் என்றும் ஒருவன் ஒருமுறை போலியாக வேடம்பூண்டு நடிக்கலாம், ஆனால் 100பேர் 2 வருடமாக போலியாக நடிக்க முடியாது என்றும் விளக்கமாக பதிலளித்தார்.

> **பி.எஸ். அப்துல்லா**
> உப தலைவர்
> வவுனியா
> பிரஜைகள் குழு

முஸ்லிம் என்ற முறையில் என் அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படி திரு. வெடிங்டனால் என்னிடம் கேட்கப்பட்ட போது இங்கு கூறப்பட்டவை யாவும் உண்மை என எடுத்துக்கூறியநான், யாழ். குடாநாட்டில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் யாவற்றையும் சுட்டிக்காட்டினேன். பிரதானமாக ஷெல் வெடிப்பு ஹெலியில் இருந்து சூடு, வீடுகள் குண்டுவைத்து தகர்ப்பு, எரிபொருட்தடை, உணவுப் பொருள், மருந்துக்கட்டுப்பாடு ஆகியனவும் விபரிக்கப்பட்டது

இதற்கு திரு வெடிங்டன் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் பயங்கரவாதிகளை இதைவிட வேறு எப்படி ஒழித்துக் கட்டுவது? எனக் கேட்டபோது திரு. சொர்ணபாலா இதுதான் உங்கள் மனப்பான்மை என்றால் எங்கள் அரசாங்கத்திடம் கூறி, தடைகளையும் அழிவுவேலைகளையும் அதிகரித்து யாழ். குடாநாட்டையே முற்றாக அழித்து விட்டால் பெரும்பான்மைத் தமிழரும்அழிந்துவிடுவார்கள். பயங்கரவாதமும் அழிந்துவிடும் என்று பதிலளித்தார். இதற்குதிரு. வெடிங்டன்நகைச்சுவையாக உரையாடி பிரச்சினைகளைத் தீர்க்க உமது அபிப்பிராயத்தை தெரிவியும் என திரு. சொர்ணபாலாவிடம் கேட்டபொழுது, பதிலளித்த திரு. சொர்ணபாலா பிரித்தானிய அரசாங்கம் எப்படி ஐ. ஆர். ஏ. (I. R. A.) பயங்கரவாதத்தை எதிர்த்து போராடி வருகிறதோ, அவ்வாறே நடக்கும்படி எமது அரசாங்கத்திடமும் கூறும்படி கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக மகாராணியின் மைத்துனர் மவுன்பற்றன் பிரபு ஐ.ஆர் ஏ. தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அப்பாவிப் பொதுமக்கள் எவரும் அரசாங்க துருப்புக்களால் தாக்கப்படாதது உலகறிந்த உண்மை எனக் குறிப்பிட்டு பேசிய அவர், இங்கு நடப்பது இதற்கு முற்றும் முரணானது என சுட்டிக் காட்டினார்.

மேலும் திரு. வெடிங்டன், தமது விஜயத்தின் முக்கிய நோக்கத்தை உள்ளடக்கிய கேள்வியை எம்முன் வைத்தார். அதாவது ஏன் தமிழர் வெளி நாடுகளுக்கு அகதிகளாக போகிறார்கள் எனக் கேட்ட போது, இவ்வினாவை ஏற்கெனவே எதிர் பார்த்திருந்த படியால், தன் மகன் ஒருவரை இராணுவம் அநியாயமாக சுட்டுக்கொன்றதால் தன் மற்ற 4 ஆண் மக்களையும் வெளிநாடுகளுக்கு அகதிகளாக அனுப்பி வைத்திருக்கும் பிரபல வர்த்தகர் ஒருவரை திரு. சொர்ணபாலா திரு. வெடிங்டனின் முன் னிலையில் சமர்ப்பித்தார்.

விளக்கம் கொடுத்த வர்த்தகரிடம் ஏன் பிள்ளைகளைத் தமிழ் நாட்டிற்கு அல்லது கொழும்பிற்கு அனுப்பவில்லை என திரு. வெடிங்டன் வினவினார். கொழும்பில் வீடு, உத்தியோகம் அற்ற தமிழர் வசிக்க முடியாதென்றும், தமிழ் நாட்டில் முன்னேற்ற வழிவகைகள் குறைவென்றும் சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் தமிழர் இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட இனமென்றும், படிப்பில், வேலை வாய்ப்பில் இன ஒதுக்கல் நிகழ்கிறது என்றும், சில தமிழ்க் கிராமங்களில் தமிழர் அப்புறப்படுத்தப்பட்டு அரசாங்கத்தால் அவ்விடங்களில் சிங்களவர் குடியமர்த்தப் படுகிறார்கள் என்றும், இந்நிலைமையில் தமிழர் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

இச்சந்திப்பில் திரு. பரராஜசிங்கம் தனது பங்களிப்பாக ஆறு பக்கங்கள் கொண்ட மகஜர் ஒன்றைத் திரு. வெடிங்டனுக்குச் சமர்ப்பித்தார்.

திரு. வெடிங்டன் இலங்கை விட்டுப் புறப்பட முன்னர் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கு அளித்த பேட்டியில், அவர் பேசிய யாவும் ஒளி பரப்பப்படவில்லை. வவுனியா இணைப்பதிகாரியின் சேவையை வவுனியா பிரஜைகள் குழு பாராட்டுகிறது என்ற ஒரு வசனம் மட்டுமே பொது மக்களுக்கு ஒளிபரப்பப்பட்டது. இது தவறானதொன்றாகும். இதன் விளக்கம் இவ்வறிக்கையின் 3ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளது.

---

## பொற்பதி விநாயகர் பொங்கல்

(திருநெல்வேலி)

வரலாற்றுச் சிறப்புடைய கொக்குவில் பொற்பதி விநாயகர் திருத்தலத்தில் — நாளை ஞாயிற்றுக்கிழமை வருடாந்த சங்காபிஷேகமும் பொங்கல் வைபவமும் நடைபெறும்.

குறுநாவல் . . . (17)




''ஆ அதோ'' அந்த மேகத்திரள்! நிலவை அணைத்துக்கொண்டிருக்கிறதே இருட்டு மெதுவாக படர்ந்தது.

சூர்யா ஊர்ந்து செல்லத் தொடங்கினான். மிக விரைவாக ஊர்ந்தான். மேகத்திரளானது நிலவைக் கடந்து அப்பால் செல்ல முன், இராணுவத்தினர் திரும்பிவருவதற்கு முன்னால் நாவல் மரத்தை சென்றடைந்து விடவேண்டுமே?

அந்த மேகங்களை வாழ்த்தவேண்டும் என்று இப்போது நினைத்துக்கொண்டான் 'மேகம்என்றால் இது வல்லவோ மேகம்' அவன் பாதி தூரத்தை அடைந்திருப்பான். திடீரென நிலவு ஒளி படர்ந்தது.

மேகத்திரளின் இடையில் ஏற்பட்ட இடைவெளியே அதற்கு காரணமாகும். தரையோடு தரையாகப் படுத்துக்கொண்டான்.

''மூதேவி ஓட்டை'' கெட்டவார்த்தைகளால் இடைவெளியை திட்டினான், அந்த இடைவெளி நிலவைக் கடந்ததும் மறுபடியும் இருட்டு படர்ந்தது.

சூர்யா மீண்டும் ஊர்ந்து செல்லத் தொடங்கினான். நாவல் மரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

சூர்யா நாவல் மரத்தின் பின்னால் மறைந்து கொண்ட அதே வேளை புதர்களிற்கு இடையில் பேச்சுக் குரல் கேட்டது அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நல்லவேளை இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்திருந்தாலோ அவர்கள் பார்வையில சிக்கி தீர்ந்திருப்பேன் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

இராணுவத்தினர் ஒருவர் பின் ஒருவராக அவனைக் கடந்து சென்றார்கள்.

அவன் தற்காலிகமாக மூச்சு விடுவதை நிறுத்திக் கொண்டான். ஓசை எழும் என்ற காரணத்தால் ''...... ஏழு, எட்டு, ஒன்பது, பத்து'' எண்ணியவன் கடைசி இராணுவத்தினன் அவனைக் கடந்து செல்லும் போது முழுப்பலத்தையும் திரட்டிக் கொண்டு அவன் மீது பாய்ந்தான்.

ஒவ்வொரு இராணுவத்தினரும் ஐந்து யார் இடைவெளியிலேயே போயக்கொண்டிருந்தார்கள். கடைசியாகப் போனவன் 'சோணகிரியாக' இருப்பான் போலிருக்கிறது. ஏறக்குறைய எட்டு யார்களிற்கு மேற்பட்ட தூரத்திலே போய்க்கொண்டிருந்தான் அவன்தான் இப்போது சூர்யாவின் கையில் சிக்கி உயிரை விட்டிருந்தான்.

சூர்யாவின் பேனாக்கத்தி அவனது குரல்வளையைத் துண்டாடியிருந்தது முன்னால் போய்க்கொண்டிருந்த இராணுவத்தினன் நடந்த இந்த அசம்பாவிதத்தை கவனிக்காமலேயே தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தான். இறந்துபோன இராணுவத்தினனின் உடலைக் கீழே போட்டுவிட்டு அவனது M.16 ரக துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவனிற்குப் பதிலாக தான் விரைந்தான் சூர்யா.

இராணுவ முகாமிற்கு உள்ளே நுழையும் பிரதான வாசலிலிருந்து நூறு யார்களிற்கு அப்பால் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். கால்களை அகட்டி வைத்தபடி ஆயுதங்களை மேலே தூக்கியபடி ஒருவரிலிருந்து ஒருவர் விலகியபடி நிற்குமாறு உத்தரவிடப்பட்டனர். முகாமின் வாசலிலிருந்த சிப்பாய் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான். அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

சூர்யாவும் கட்டளைக்கு கீழ்ப்படிந்தான். முகாமின் வாசலின் சிப்பாய் சுடு நிலையிலான துப்பாக்கியுடன் தயாராக இருக்க இன்னொருவன் கையில் துப்பாக்கியுடன் இவர்களை நோக்கி வந்தான. 'செக் பண்ண வருகிறான். நிச்சயமாக என்னை இனம் கண்டு விடப்போகிறான். வகையாக மாட்டிக் கொண்டேன்' என்று நினைத்தான் சூர்யா.

அப்படி ஏதாவது நிகழ்ந்தால் கையில் உள்ள M.16 ஐனல் கண் மண் தெரியாமல் எல்லாரையும் சுட்டுத்தள்ள வேண்டியதுதான். நிலவை இப்போதும் மேகங்கள் மூடியிருந்தன. மெல்லிய இருட்டை மேலாடையாக பூமாதேவி போர்த்தியிருந்தாள்.

வந்தவன் முன்னாலிருந்த இராணுவத்தினனிடம் ஏதோ கேட்டான். பின்னர் ஆட்களை எண்ணிப் பார்த்துக் கொண்டான். பின்னர் அவர்களை உள்ளே போக அனுமதியளித்தான். நல்ல வேளையாக அவன் சூர்யாவை இனம் கண்டுகொள்ளவில்லை.

இராணுவ முகாமில் ஜெனரேட்டர் மூலம் மின்சார வசதியை ஏற்படுத்தியிருந்தார்கள். முகாமின் சில பகுதிகள் இருள் படிந்திருந்தன. இருள் படிந்த பகுதியொன்றில் பதுங்கிக் கொண்டான் சூர்யா. மற்ற இராணுவத்தினரோ ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார்கள். இப்போது முகாமில் கடமையிலுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் நித்திரையிலிருந்தார்கள்.

அது ஒரு சிறிய முகாமே. இதைவிட காட்டின் மத்தியில் திடீரென அமைக்கப்பட்ட முகாம். சூர்யா தனது பேனாக்கத்தியின் உதவியுடன் 'ரவுண்டியூட்டி' எனப்படும் சுற்றுக் கடமையாளியை மடக்கிவிட்டான். இருட்டு சூர்யாவிற்கு துணை புரிந்தது. குரல்வளை அறுக்கப்பட்டதால் சப்தம் எதுவும் எழுப்பாமலேயே உயிரை விட்டுவிட்டான் அந்த 'ரவுண்டியூட்டி'

அவனின் வேஷத்தில் சென்று வாசலில் கடமையிலீடுபட்டிருந்த கடமையாளியை மடக்க முற்பட்ட போதுதான் துர்திஷ்டம் ஏற்பட்டது. சூர்யாவின் குறிதான் தவறிவிட்டதோ அல்லது முழுப்பலத்தையும் பிரயோகிக்க தவறிவிட்டானோ தெரியவில்லை. வாசலில் கடமையிலிருந்தவன் கோரமாக அலறிவிட்டே உயிரை விட்டான்.

அவனது அலறல் முகாமை எச்சரிக்கைப் படுத்திவிட்டது. சூர்யாவைச் சுற்றிலும் ரவை வண்டுகள் பறக்க ஆரம்பித்தன. அவன் தனது இடுப்பில் பொருத்தப்பட்டிருந்த கையெறி குண்டுகள் இரண்டையும் உருவி எதிரே தெரிந்த 'டென்ற்' களை நோக்கி எறிந்தான். அவை ஜெனரேட்டர் மீது விழுந்து தீப்பிடித்துக் கொண்டது. நித்திரையிலிருந்து எழுந்த இராணுவத்தினரோ, கண்மண் தெரியாமல் எதிரிகள் யார் என்று இனம் காண முடியாமல் தங்களுக்குத் தாங்களே சுட்டுக் கொண்டார்கள்.

இப்போது தீ வேகமாகப் பரவி முகாம் முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கண்ணி வெடிகளும், கையெறி குண்டுகளும் வெடிக்க ஆரம்பித்தன. எஞ்சிய இராணுவத்தினரோ தீயிலிருந்தும், வெடிபொருளிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமுகமாக முகாமின் வாசல் பகுதியை நோக்கி ஓடி வரத்தொடங்கினார்கள்.

சூர்யா ஏற்கனவே முகாமின் வாசற்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த L.M.G எனப்படும். இலகு யந்திர துப்பாக்கியை முகாமை நோக்கி திருப்பியிருந்தான். ஓடி வருகின்ற இராணுவத்தினருக்கு 'எமனை' ரவைகள் மூலம் அனுப்பிக் கொண்டிருந்தான். துப்பாக்கிக் குண்டுகளையும் ஏற்றுக் கொண்டு ஓடி வந்த இராணுவத்தினன் ஒருவனின் குண்டு வரிசையொன்று சூர்யாவின் நெஞ்சை உடைத்துச் சென்றது. இரத்தம் உடலிலிருந்து வேகமாக வெளியேறியது.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வுகளை இழந்து கொண்டிருந்தான். இருந்த போதிலும் முகாமிலிருந்து தப்பி ஓடி வந்த கடைசி இராணுவத்தினனையும் சுட்டுத் தள்ளிவிட்டே தன் நினைவுகளைத் தப்பிப்போக அனுமதித்தான். முகாமிற்கு வெளியே கடமையிலீடுபட்டிருந்த பத்து இராணுவத்தினரையும் தவிர மற்ற எல்லா இராணுவத்தினரையும் ஒழித்து விட்டிருந்தான் சூர்யா.

அந்த பத்து பேரையும் தேசபக்த யுத்தத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற சக போராளிகள் கவனித்துக் கொள்வார்கள். அல்லது ஒருவேளை அவர்கள் இந்த சியோனிஸ அரசின் மீது விரக்தியுற்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயபூர்வமான தன்மையை உணர்ந்து அதற்கு ஆதரவளிக்கக் கூடும்.

(முற்றும்)

## அச்சுவேலி அலுவலகத்துக்கு மின்சாரசபை அறிவிப்பு:

# மின்மாற்றி தேவையானால் நிலுவை செலுத்த வேண்டும்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் சட்ட விரோத மின்பாவனையாளர்களால், ஏற்பட்ட மேலதிக மின் பாவனை நிலுவையினையும் இதுவரை பணம் செலுத்

சுவாமி சித்ருபானந்தா

தாமல் நிலுவையினை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் அதனை செலுத்தும் வரை திட்டமிடப்பட்டவாறு மின்மாற்றி இரண்டும் பொருத்த முடியாதென அச்சுவேலி உப அலுவலகத்திற்கு மின்சார சபை அறிவித்துள்ளதெனத் தெரிய வந்துள்ளது.

பழைய நிலுவையினை ஓரளவு கட்டி முடிக்க உபஅலுவலகத்தால் நடவடிக்கை எடுத்த போதும் தொடர்ந்து நடைபெற்ற சட்ட விரோத மின் பாவனையால் மேலும் நிலுவை அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொடர்ந்துவரும் மின்பாவனை நிலுவைகளை கட்டி முடிப்பதில் உப அலுவலகம் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றது.

இதனால் சட்ட விரோதமின் பாவனையைத் தடுக்க உப அலுவலகம் துரிதநடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுவதுடன், நிலுவையாகவுள்ள மின் பாவனையாளர்கள் பணத்தைச் செலுத்தி உதவும் படியும், இதன் மூலமே புதிய மின் இணைப்புகள் வழங்க முடியுமெனவும். புதிய மின்மாற்றிகளும் பொருத்த முடியும் எனவும் அச்சுவேலிப் பகுதி பொதுநல அமைப்புக்கள் கூட்டாக மக்களிடம் வேண்டியுள்ளன.

# பாதிப்புற்ற மாணவருக்கு கல்விநிவாரண நிதியுதவி

(உடுப்பிட்டி)

யாழ். பெரியாஸ்பத்திரியில் ஷெல் தாக்குதலுக்குப் பலியான இருவரின் பிள்ளைகளுக்கு கல்வி நிவாரண நிதியுதவி வழங்க பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஏற்பாடு செய்துள்ளது.

ஷெலலுக்குப் பலியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு சண்முகம் சுப்பிரமணியத்தின் மகனுக்கும் நல்லூரைச் சேர்ந்த திரு கந்தையா பாலசுந்தரத்தின் மகனுக்கும் கல்வி நிவாரண நிதியுதவி வழங்கப் படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் க.பொ த. உயர்தர வகுப்பில் படிக்கும் செல்வன் சு. சத்திய சீலன் என்பவருக்கும், இந்து மகளிர் கல்லூரியில் கற்கும் தர்ஷினி, மதனா ஆகியோருக்கும் ரூபா ஆயிரத்துக்கான காசோலையை எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ் இந்துக்கல்லூரியில் வைத்து சேவாச்சிரம பீடாதிபதி சித்ருபானந்தா வழங்கவுள்ளார்.

# அமரர் நவரத்தினசிங்கம் நினைவு மண்டபம் வேண்டும்

## நெடுந்தீவு பழைய மாணவர் விருப்பம்

(நெடுந்தீவு)

''நெடுந்தீவின கலவி வளர்ச்சியில பிரதான இடத்தைப் பெறும் நெடுந்தீவு மகாவித்தியாலயம் உயர்ந்த நிலையில் தனது முன்னாள் மாணவர்களையே இன்று ஆசிரியர்களாகக் கொண்டு இயங்கி வருவது பாராட்டிற்குரியதாகும். இந்த உயர்வுககு உதவிய எமது மகாவித்தியாலய ஸ்தாபகர் அமரர் சி.வீ.ஈ. நவரத்தினசிங்கம் அவர்கள் நெடுந்தீவு மக்களின் மனத்தில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளார். அவரின் ஞாபகார்த்தமாக ஒரு நினைவு மண்டபத்தை பழைய மாணவர்களாகிய நாம் உருவாக்கி உதவ வேண்டும்.''

இவ்வாறு நெடுந்தீவு மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூடடத்தில் கலந்து கொண்டு பேசிய திரு ஐ சச்சிதானந்தன் தெரிவித்தார்

பழைய மாணவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து மகாவித்தியாலய வளர்ச்சிக்கும், ஆக்கத்திற்கும், பொருளுதவி மாத்திரமன்றி நல் ஆலோசனையையும் வழங்குதல் வரவேற்கப்படுகின்றது. எனவே எவரும் தமது கருத்தைத் தெரிவிப்பதுடன் எமது முயற்சிகளுக்கு ஊக்கம் தரவேண்டும் என்று வித்தியாலய அதிபரும், நெடுந்தீவு கொத்தணி அதிபருமான திரு. இரா. சின்னத்தம்பி கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்திற்குப் பழைய மாணவர்கள் பெருந்தொகையினராகக் கலந்து கொண்டதுடன் ஒன்பது பேரைக் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# ஆலயங்களில்

(கொக்குவில்)

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அருள்மிகு ஸ்ரீ அரசடி ஞானவைரவர் கோவில் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடங்கி பத்துத் தினங்களுக்கு நடைபெறவிருக்கிறது.

பிரதம குருவாக சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் பணிபுரிவார். அறிவொளி சனசமூக நிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

★ ★

(சங்கானை)

வட்டுக்கோட்டை மேற்கு மூன்றும்பனை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை எட்டு மணிக்கு நடைபெறும்.

★ ★

(சங்கானை)

வட்டுக்கோட்டை— அடைக்கலந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 4 ஆம் திகதி திங்கட் கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

★ ★

(சங்கானை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற சண்டிலிப்பாய் அருள் மிகு ஸ்ரீ சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

★ ★

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிகழும் ரதோற்சவத்தையடுத்து 13 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவடையும்.

# பொசப் பொழுது

யாழ். வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்தில் கடமையாற்றும் உயர் அதிகாரி ஒருவர் தம்மைப் பொது மக்கள் சந்திப்பதற்கு 'சிட்' முறையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது பற்றி பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க செயலகம், மாநகராட்சி மன்றம் ஆகியவைகளின் தலைமை அதிகாரிகளையே பொதுமக்கள் இலகுவாக, எந்த விண்ணப்பமுமின்றிச் சந்திக்கக் கூடிய இந்த நாட்களில்......

வீடமைப்புச் சபைக் கந்தோரில் மட்டும் ஒருவர் இவ்வாறு ''ராஜ பார்ட்'' ஏன்தான் போடுகிருரோ?

உக்கிரன்

ராஜ்யசபையில் வெளியுறவு அமைச்சர்:

# எல்லைப்புற அச்சுறுத்தலை இந்தியா சந்திக்கத் தயார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்குஅமெரிக்கா எவாக்ஸ் சாதன வசதியுள்ள நவீனரக போர் விமானங்களை வழங்கும் விடயத்தில் எழுந்துள்ள புதிய அச்சுறுத்தலை சந்திப்பதற்கு பாரதம் தயாராகவே இருக்கிறது.

மேற்கண்டவாறு பாரத பாதுகாப்புத்துறை அமைச்சர் கே. சி. பந்த் ராஜ்ய சபையில் நடந்த இரண்டு நாள் விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; பாரதம் சீனவுடனுன எல்லைப் பிரச்சினைக்கு தக்கதோர் சமாதானத் தீர்வு காண்பதிலேயே நம்பிக்கை கொண்டுள்ளது. எனினும் இது சாத்தியப்படுமா என்பது தான் இன்றுள்ள கேள்வி

பாகிஸ்தானுக்கும் சீனவுக்கும் கடந்த ஆண்டிலிருந்து பெருக்கமடைந்துவரும் புதிய உறவு பாரதத்தை சிந்திக்க வைத்துள்ளது. எப்படியிருந்த போதும் எல்லா நாடுகளுடன் நல்லுறவை கட்டி வளர்ப்பதையே நமதுநாடு கருத்தாகக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் 1.7 பில்லியன் டாலர் இராணுவ உதவி பாரதத்துக்கு மேலும் கவலை தருவதாகும். இந்த உதவியின் மூலம் வந்துள்ள பயமுறுத்தலை பாரதம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? விடயங்களை நாங்கள் விளங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைக் காட்டக் கூடிய நடவடிக்கைகளை பாரதம் மேற்கொள்ளும் என்ருர்.

இதனிடையே பாகிஸ்தானின் குத்தகை விமானக் கோரிக்கையை அமெரிக்கா பரிசிலனை செய்து கொண்டிருப்பதாகவும் எனினும் இது பற்றிய இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு. ஆர்னகாட் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் கம்பெனியொன்று பாகிஸ்தானுக்கு அணுகுண்டுகள் தயாரிப்பதற்கான அணுசக்தி, யூறேனியம் செறிவூட்டற் சாதனங்களை சட்ட விரோதமாக விற்றுள்ளதாக ஸூரிச் செய்தி ஏடொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இது பற்றி சுவிஸ் அரசு விசாரணைகள் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஹொரைசன் என்ரர்பிரைசஸ்

HORIZON ENTERPRISES

★ குவைத் ★ சவூதி
★ ஓமான் ★ டோகா

ஆகியவற்றுக்கான

பிரயாண ஒழுங்குகள்

கடந்தவாரம் எமது முகவர் நிலையத்திஞல் பயணம் மேற்கொண்டோரைத் தொடர்ந்து இவ்வாரம் 25-4-87 சனிக்கிழமை அன்று பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரம் பின்வருமாறு:-

1. அந்தோனிப்பிள்ளை டொன் பொஸ்கோ, வாட் நம் 8, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
2. கந்தையா முருகையா, வாட் நம் 2, சரவணை மேற்கு, வேலணை
3. கிறிஸ்ரி அன்ரனிதாஸ், இல. 12/2, கெனடி லேன், நாவாந்துறை.
4. பரம்சோதி உதயகுமார், நாவலடி லேன், மயிலிட்டி
5. நடேசராஜா நவரட்ணராஜா, இல 26, கனகரட்ணம் வீதி, அரியாலை.
6. சந்தியா பத்திநாதர் அன்ரன், பெரியவிளான், இளவாலை.
7. கதிரவேலு கிறிஷ்ணபிள்ளை, தாவளை இயற்ருலை, வரணி.
8. சற்குணம் அரசரட்ணம், பெரியவிளான், இளவாலை.
9. தம்பையா ரவிச்சந்திரன், திருமகள் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
10. யோசப் பெர்ணன்டோ, கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
11. கதிரவேலு கந்தசாமி, கைதடி மேற்கு, கைதடி.
12. இராமலிங்கம் பாலசுந்தரம், பூநரி, நல்லூர்.
13. செல்லையா விமலச்சந்திரன், பூநரி, நல்லூர்.
14. அன்ரனி கிறிஸ்ரி சேவியர், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு,
15. இளையதம்பி பிரேமச்சந்துரு இன்ஜினியர், ஈஸ்வரி வாசா, கட்டுக்காணி லேன், சாவகச்சேரி.
16. சிவலிங்கம் சுபாஸ்கரன், உரும்பராய் மேற்கு, உரும்பராய்.

சவூதி குவைத் ஓமான் டோகா

ஆகியநாடுகளுக்கான வெற்றிடங்கள் அதிகளவில் இருப்பதால் உடன்16 புகைப்படம், பாஸ்போட்டுடனும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

நாம் மத்திய கிழக்கு நாடுகட்கான பிரயாண ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிருேம் உங்கள் கடவுச் சீட்டுக்களை குறித்ததவணையில் செய்துதரப்படும். எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்முடன் கடிதமூலம் தொடர்புகொள்வோர் முத்திரைக் கவருடன் தொடர்புகொள்ளவும்.

A. பத்மதாஸ்

மதுரா வீடியோ கிளப், இல. 96, 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல 23549

041125


## இன்றைய பலன்

**மேடம்:** சகோதரர் உதவி, பெரியோர் நட்பு, இல்லச் சிறப்பு, விருந்தினர் வருகை, கொடுக்கல் வாங்கல் சிறப்பு, தொழில் விருத்தி.

**இடபம்:** வாக்குப்பலிதம்' வணிகர்களுக்கு நல்ல வருமானம், பெரிய இடத்துச் சிநேகம், உத்தியோகம் பார்ப்போர் உயர்வடைவர், காரிய சித்தி.

**மிதுனம்:** மாதுரு வழிச் சிறப்பு, களஸ்திரவழி உதவி உடலொட்டிய ரோகம் நிவர்த்தி, பூமியால் இலாபம், புதுத் தொழில் விருத்தி

**கடகம்:** வீண் விரயம், நன்மை செய்து தீமையைத் தேடுவீர், பிதாவழியால் மனக்கிலேசம், தூரத்துச் செய்தி துயரம் தரும்

**சிங்கம்:** அதிகலாபம், மட்டற்ற மகிழ்ச்சி, தருமச் செலவு, தானியவிருத்தி, பொருள் வரவு.

**கன்னி-** தொழிலால் முன்னேற்றம், சுட்டடக்கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர், வியாபாரவிருத்தி, மனநிறைவு.

**துலாம்:** புதுவிதமான தொழிலில் இறங்குவீர், பூர்வீக சொத்துக்கிடைக்கும், பெரும் புகழ், மட்டற்ற மகிழ்ச்சி.

**விருச்சிகம்:** வீண்பழி கேட்டல், மனம்போன போக்கில் நடத்தல், மனக் கவலை வாக்குக் கலகம், மன அடக்கம் நன்று.

**தனுசு:** களஸ்திர சுகம், விவாகப்பேறு, மனையில் குதூகலம், புத்திரரால் புகழ், தூரதேசம் போனவர் வருகை.

**மகரம்:** சத்துருஜெயம், தான் நினைத்தது கை கூடும், மாமன் வழிப்பகை, உத்தியோக இடமாற்றம்

**கும்பம்:** எதிலும் முன்னணி வகிப்பீர்கள், எடுத்த காரியம் ஜெயம், நீண்ட நாள் கடன் நிவர்த்தி.

**மீனம்:** மாதுரு வழிப்பகை, அரச பயம், குற்றம் செய்யாமலே கொடுமைப்பட நேரும்.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## சிங்களவருக்கும் பாதுகாப்பில்லை

லண்டனில் உள்ள மாதா கோயில் ஒன்றில் அடைக்கலம் புகுந்துள்ள சிங்களவர் ஒருவரை அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்தக் கூடாது என லண்டன் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த நபரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும் எனவும் அப்படி திருப்பி அனுப்பினுல் அவர்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது எனவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்ததை நிராகரித்த நீதிபதி இலங்கையின் உறுதி மொழிகளை நம்ப முடியாது எனவும் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

## முருகையா இடமாற்றம்

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. த. பூ. முருகையா மாங்குளம் அலுவலகத்திற்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சபையின் முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட முகாமையாளராகக் கடமையாற்றும் திரு. சின்னையா சாந்தலிங்கம் யாழ். முகாமையாளராகப் பொறுப்பேற்கவுள்ளார். எதிர்வரும் நான்காம் திகதி இவர் தனது கடமையை ஏற்றுக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## ஆசிரியர் சகாய நிதிச்சங்கம்

(ஆனைக்கோட்டை)

கிறிஸ்த சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்க 32வது வருடாந்தப்பொதுக் கூட்டம் சங்கப் பணி மனையில் திரு. ஆ. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்; திரு. ஆ. நடராசா, உப தலைவர்கள்; திரு. மு. சிதம்பரநாதன், நா. நல்லையா, செயலாளர்;-திரு. சி. கந்தசவாமி, உப செயலாளர்;-திரு. பொ. ஸ்ரீஸ்கந்தரசா, பொருளாளர்;-திரு. ந. சிவபாதம்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இரு புலிகள் வீரமரணம்

கடந்த செவ்வாய் யாழ் கோட்டைப் பகுதியில் சென்றியில் இருந்த விடுதலைப்புலிப் போராளி இராஜன் (ஒட்டுமடம்) இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி வீர மரணமடைந்தார் இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டைப் பறிச்சானில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்ட போது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலி போராளி சபேசன் (மூதூர்) வீர மரணமடைந்தார். இராஜன் சபேசன் ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர அஞ்சலியைத் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்கா அணு பரிசோதனை

(வாஷிங்டன்)

அமெரிக்கா நிவாடா பாலைவனத்தில் மீண்டும் ஒரு அடிநில அணு பரிசோதனையை நடாத்தியுள்ளது.

இந்த ஆண்டில் அமெரிக்கா நடத்தியுள்ள ஆருவது அணு பரிசோதனையாகும் இது. 2000 அடி ஆழத்தில் வைத்து இது பரிசோதிக்கப்பட்டுள்ளது.

1945 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 800 அணு பரிசோதனைகளை அமெரிக்கா நடாத்தியுள்ளதாக ஆயுதத் துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெர்ணுட் புகார்

(புதுடில்லி)

இலங்கைத் தமிழருக்குத் தமிழக அரசு வழங்கவிருக்கும் நான்கு கோடி ரூபாவுக்கு இலங்கை அரசு நேற்று கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இலங்கைத் தூதுவர் திரு. பெர்ணுட் திலகரத்தின நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சில், வெளியுறவு செயலாளர் திரு. கே. பி. எஸ். மேனனைச் சந்தித்து இலங்கை அரசின் கண்டனத்தைத் தெரிவித்தார்.

தமிழகஅரசின் இந்த செயல் இலங்கையின் இறைமை மீது செலுத்தும் குறுக்கீடு எனவும், சட்டவிரோதமான செயல் எனவும் இலங்கைத் தூதுவர் கூறினுர்.

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலயத்தின் புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும்.

★ ஹெலியையும் பொருட்படுத்தாது உரும்பிராயிலிருந்து நல்லூர் வரை

# வரலாறு கண்டிராத மேதின ஊர்வலம்!

02-05-1987 சனிக்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI



தமிழீழ விடுதலைப் புலிகளால ஏற்பாடு செய்யப்பட்ட நேற்றைய மாபெரும் மேதின ஊர்வலத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி இரு இலட்சம் வரையிலான மக்கள் கலந்துகொண்டனர். உரும்பிராயில் இவ்வூர்வலம் ஆரம்பமாகிய போது ஹெலிகாப்டரொன்று அப்பகுதியில் திடீரென வந்து சுற்றிச் சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதிலும் மக்கள் எவரும் குழப்பமடையாமல் தொடர்ந்தும் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

உரும்பிராயிலிருந்து காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமான இவ் ஊர்வலம் நல்லூர் கோவிலடியை முழுமையாக வந்தடைய சுமார் நான்கு மணிநேரம் சென்றது. சுமார் அறுமைல் நீளமான இவ் ஊர்வலத்தின் முன்பாக சிவப்பு நிற சீலையில் மஞ்சள் நிறத்தில் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட பெரியளவிலான 'பனர்' கொண்டு செல்லப்பட்டது.

தமிழீழப் பெண்ணினமே திரண்டெழு! சமுதாயமே எங்களைப் போராடவிடு!, வானத்தாக்குதல் தொடர்ந்தாலும் மானப் போராட்டம் தொடர்ந்தே தீரும், சர்வதேசமே எமது போராட்டத்தை அங்கீகரி!, தம்பியின் தலைமையில் செல்லுதடா புலிப்படை தமிழீழத்தை நோக்கி, பனிமலைகளில் மட்டுமல்ல பனைமரங்களின் கீழும் - பூக்கும் புரட்சி மலர்களே, மலையகப் பாட்டாளிகளின் விடிவு சுதந்திரத் தமிழீழத்தில் தான் போன்ற பல்வேறு கோஷங்கள் ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்டன. சுலோகங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் காணப்பட்டன.



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி (இடது) நவ சமசமாஜக் கட்சி ஆகியவைகளின் ஐக்கிய மேதின ஊர்வலம் நல்லூரில் புறப்பட்டு கொக்குவிலைச் சென்றடைந்தது.
(படம்: வி. ஆனந்த்)

## விடுதலைக்காகப் போராடுவோர் தோற்பது இல்லை!

(நாயன்மார்கட்டு நிருபர் இ. மயில்வாகனம்)

விடுதலைக்கு போராடுபவர்கள் என்றுமே தோற்பது கிடையாது. மன உறுதியுடைய மக்களின் இலட்சியங்கள் ஒருபோதும் செயலிழந்துவிடாது. இவற்றினடிப்படையிலேயே உலகரீதியில் இன்று மேதினங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகரான திரு. அ. வைத்திலிங்கம் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கொக்குவிலில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசார்பு பிரமுகர் திரு. கே. செந்தில்வேல் உரையாற்றுகையில், சர்வதேச தொழிலாளர்களும் உலகில் ஒடுக்கப்படும் மக்களும் விடுதலை உணர்வை வெளிக்காட்டும் இன்றைய மேதினம் இலங்கையில் வடக்கிலேயே நடைபெறுகிறது. சுயாட்சி ஒன்றின் மூலம்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில், இன்றைய அரசின் அநீதிகளை வேரறுக்க அகில இலங்கையிலும் இடதுசாரிகளின் ஐக்கியமும் வேலைத்திட்டமும் ஒற்றுமையும் அவசியமாகிறது. இதன் மூலமே இன்றைய கொடிய ஆட்சியை மாற்ற முடியும் என்றார்.

நவசமசமாஜக்கட்சி பிரமுகர் திரு. ஆ. க. அண்ணாமலை உரையாற்றுகையில், ஜே. ஆரின் ஆட்சியில் இதுவரை பதினையாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நான்கு லட்சம் பேர் அகதிகளாயுள்ளனர். ஒரு லட்சம் பேர் காயமடைந்துள்ளனர். தமிழினத்தை அழிப்பதுதான் தனது இலட்சியம் என அத்துலத்முதலி கூறுகிறார். தமிழினம் ஒரு தேசிய இனம். பிரிந்து போகும் உரிமை தமிழினத்துக்கு உண்டு என்பதை எமது கட்சி அங்கீகரித்துள்ளது என்றார். வேறு பலரும் உரையாற்றினர்கள்.

## ஈழவர் முன்னணி ஊர்வலம்

(உடுவில் நிருபர் சி. சந்தானகுமரன்)

ஈழவர் முன்னணியால் நேற்று நடாத்தப்பட்ட மாபெரும் மேதின ஊர்வலத்தில் சுமார் பதினையாயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலத்தின் முன்பாக தமிழர் கொலைகளையும், இனப்பிரச்சினையையும் சித்தரிக்கும் ஊர்திகளும் கொண்டு செல்லப்பட்டன.

காலை பத்து மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. பாடசாலை மாணவர்கள். சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட சகல தரப்பினரும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

தலைக்கு மேலே பொம்பர், ஈழத்தில் எங்கும் பிணங்கள், தேடுதல் வேட்டையா. ஈழவர் வேட்டையா, அதிகார வர்க்கமே தொழிலாளர்களை நசுக்காதே, வன்னி மக்களுக்கு இனியும் இன்னல் கொடுக்காதே, உத்தமர் பேச்சு உலகை ஏமாற்றவே போன்ற பல்வேறு சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன.

## திருமலையில் 19 தமிழர் சுட்டபின் எரிப்பு

திருமலை மாவட்டத்தில் உள்ள பட்டித்திடல் என்ற கிராமத்தில் பத்தொன்பது தமிழர்கள் இராணுவத்தினரால சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களுடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட பத்தொன்பதுபேரில் பல பெண்களும், சிறுவர்களும் அடங்குவர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பின்னர் இராணுவத்தினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. பட்டித்திடல், பழத்தடிச்சேனை, பழத்தோப்பூர் ஆகிய தமிழ்க் கிராமங்களில் மட்டும் அன்றையதினம் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களுடைய வீடுகளும், உடைமைகளும் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

### மலையகம்...

அவர்களால்தான் அரசின் ஆணிவேரை அறுக்கமுடியும்.''

இவ்வாறு நேற்று ஈழவர் முன்னணியால் நடாத்தப்பட்ட மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட 'ஈரோஸ்' இயக்கப் பொறுப்பாளர் திரு. பரராசசிங்கம் (பரா) தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

எட்டு லட்சம் மலையக மக்களும் அணிதிரண்டால் — ஒரு நாளைக்கு வேலைக்குச் செல்லாவிட்டால்—அரசுக்கு பலகோடி ரூபா நட்டம் ஏற்படும்.

வடக்கு, கிழக்கு மக்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏமாற்றி ஈழம் பெற்றுத் தருவோம் என்று கூறிவிட்டு இந்தியாவில் சுகபோகம் அனுபவிக்கிறார்கள். இதேபோன்றுதான் தொண்டமானும் மலையகமக்களை ஒவ்வோர் நாளைக்கு ஒவ்வோர் கதைகூறி ஏமாற்றுகிறார். கூட்டணியினர் எவ்வாறு மக்களால் தூக்கியெறியப்பட்டனரோ அவ்வாறே தொண்டமானும் மலையகமக்களின் எழுச்சியால் தூக்கியெறியப்படுவார்.

கூட்டம் ஈழவர் முன்னணிப் பிரமுகர் திரு. எஸ். எட்வேட் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் செல்வநாயகம், மகாதேவா, யோகராஜா, பாலா ஆகியோரும் பேசினார்கள். கூட்டம் தொடங்குவதற்குமுன்னர் ஈழத் தேசிய கீதமும், சர்வதேச தொழிலாளர் கீதமும் பாடப்பட்டது.

### பிரபா நன்றி!

நேற்றைய மேதின விழாவில் பங்கேற்ற லட்சக்கணக்கான மக்களுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரன் நன்றி தெரிவித்துள்ளார். ''உங்களின் அசையாத உறுதிப்பாடு தமிழீழத்தை வென்றெடுக்கும் என்பதில் ஐயமில்லை'' என்று தமது நன்றியில் பிரபா தெரிவித்துள்ளார்.

### இலங்கை...

ற்சி எடுத்து வருவதை சோவியத்யூனியன் நன்றாக அறியும். அமெரிக்கா தனது இந்த முயற்சியை நிறைவேற்றிக் கொள்வதற்கு தற்போது இலங்கை இனப்பிரச்சினையை ஒரு சாட்டாகப் பயன்படுத்த முயலுகின்றது. இதன் மூலம் இப்பிராந்தியத்தை இராணுவமயமாக ஆக்கிரமிக்க அமெரிக்கா முயல்கின்றது' என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பு...

உட்பட நாற்பது பேர் படுகாயமுற்றனர்.

கொழும்பில் விகாரையொன்றிலிருந்து பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டபோது இத்தாக்குதல் இடம்பெற்றது. கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச்சூடு, கல்வீச்சு ஆகியனவும் இடம்பெற்றன.

### ஜனசமுத்திரத்தின்..

பட்ட மேதின ஊர்வலத்தின் முடிவில் இடம்பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்குதிடீரென வருகை தந்த தளபதி கிட்டு மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியில் உணர்ச்சிகரமாக உரையாற்றினார். ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற 'கிரனேட்' தாக்குதலால் காயமடைந்த பின்னர் மக்கள் முன் தளபதி கிட்டு தோன்றி உரையாற்றியது இதுவே முதல் தடவையாகும்.

நடக்கமுடியாத நிலையில் தளபதி கிட்டு இருந்ததால் 'வான்' ஒன்றிலேயே அவர் கூட்ட மேடைக்கு அண்மையில் அழைத்து வரப்பட்டார். ஒரு தடவையாவது தளபதியைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில மக்கள் கூட்டம் தளபதி வந்த வானைச் சூழ்ந்துகொண்டதால் வானைக் கொண்டு வரவும் கொண்டு செல்லவும் மிகுந்த சிரமமடையவேண்டி ஏற்பட்டது. தளபதி கிட்டுவுடன் மன்னார் பிராந்திய தளபதி ராதா, வன்னிப் பிராந்தியத் தளபதி மாத்தையா, புலிகளின் பேச்சாளரான ரஹீம் ஆகியோரும் உடனிருந்தனர். வானில் இருந்தவாறே தளபதி கிட்டு உரையாற்றினார்.

''எமது இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம், எமது இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு இல்லை என்று சிறீலங்கா அரசு பிரசாரம் செய்து வருகின்ற இன்றைய நிலையில் இவ்வளவு பெருந்தொகையான மக்கள் இங்கு கூடியிருப்பது எமது இயக்கம் ஒரு மக்கள் இயக்கம் என்பதை உலகநாடுகளுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. இதன்மூலம் எமது போராட்டத்திற்கு இந்தியாவினதும் உலக நாடுகளினதும் ஆதரவும் அங்கீகாரமும் கிடைத்து தமிழீழம் கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது'' என தளபதி கிட்டு அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறினார்.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. திலீபன் ''இலட்சக்கணக்கான மக்கள் இங்கு கூடியிருப்பது ஒன்று திரண்ட எமது எழுச்சியை உலகுக்குக் காட்டியுள்ளது'' என்றார்.

புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும், இந்திய மத்திய அரசுடன் இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட பேச்சுக்களில் கலந்து கொண்டவருமான திரு. யோகி இங்கு பேசுகையில், ''புலிகள் அமைப்பு ஒருமக்கள் அமைப்பு, இதற்குப் பின்னால் பெருமளவு தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை இங்கு கூடியுள்ள மக்கள் கூட்டம் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது'' என்றார். இந்தியாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அங்கு மேற்கொண்ட உண்ணாவிரதம், கூட்டணியினரின் நிலைப்பாடு பற்றியும் அவர் அங்கு விளக்கிக் கூறினார்.

புலிகள் மாணவர் அமைப்பின் (ஸோல்ட்) பொறுப்பாளர் முரளி, மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சத்தியபாமா, தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த மூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்கள்.

### ஜே. ஆர்...

மான உதவி வழங்க விரும்புவதாகவும் தூதுவர் திலகரட்ணவிடம் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 02-03-87இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது